

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பெரிய சேமூர் பகுதியில் BLA2 பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் பகுதி தேர்தல் பொறுப்பாளரும், மாவட்ட துணை செயலாளருமான ஆ.செந்தில் குமார் தலைமையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துச்சாமி 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தேர்தல் பணியாற்றுவது குறித்தும், தேர்தல் வியூகம் வகுப்பது எப்படி என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். நிகழ்வில் மு.சுப்ரமணியம், டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு. வி.செல்வராஜ், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், வி.சி.நடராஜன், காமதேனு சின்னு, ஜெகநாதன், பூமா கலையரசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் மேற்கு மண்டல குழு சார்பில் கழக தலைவர். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி 1,000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர். ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. வழங்கினார். மாவட்ட அமைப்பாளர் அழகாபுரம் ஆர். முரளி வரவேற்று பேசினார் மற்றும் அமைச்சர் மதிவேந்தன், டி.எம். செல்வகணபதி எம்.பி. தி.க. பிரச்சார செயலாளர். அ.அருள்மொழி. மாவட்ட அவைத் தலைவர். ஜி.கே.சுபாசு, ஜி.குமரவேல். மாநில நிர்வாகிகள். மு.பரமானந்தம். சி.தசரதன், சா.இராஜேந்திரன், மாரியப்பன் கென்னடி, கே. ரமேஷ்., வி.பி. இராசன், மு.பொன் தோஸ். மாவட்ட நிர்வாகிகள்.தூ. கலாநிதி (நாமக்கல்) ஏ.டி. பாலு (சேலம் கிழக்கு) கே.விவேகானந்தன்.(சேலம் மேற்கு) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழறிஞர் கலைஞர் 102ஆவது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவீர்!

## புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயற்குழுவில் தீர்மானம்! கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை. மே 13–

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 07.05.2025 புதன்கிழமை காலை 11 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச்செல்வன் அவை கூடத்தில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில் நடைபெற்றது. புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அனைவரையும் வரவேற்றார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், செ. அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, சு.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வுகளில் கழகத்தினர் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் அரசு 5 ஆம் ஆண்டு அடி எடுத்து வைக்கும் வேலையில் அவர்கள் பணி சிறப்பாக தொடர்ந்திடவும் 7 வது முறையாக கழக ஆட்சியையும் 2 வது முறையாக தலைவர் தளபதியார் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பணியாற்ற மாவட்ட கழகம் இன்று முதல் தேர்தல் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளுதல். நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு என தலைமை கழக அறிவிப்பின்படி கழக ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் மாவட்டம் முழுவதும் நடத்துதல். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுதல். அமலாக்கத்துறை போன்ற அமைப்புகள் மூலம் அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படுத்தும் ஒன்றிய பாஜக அரசின் அதிகார அத்துமீறலை இந்த மாவட்டம் வன்மையாக கண்டிப்பதோடு மக்கள் மன்றத்தில் சட்டத்தின் துணை கொண்டு திமுக எதிர்கொள்ளும் என தலைவர் தளபதியார் வாதத்திற்கு வலு சேர்க்கும் வகையில் சிறப்புடன் பணியாற்றுவது. மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்கள் "புரச்சிக்கவிஞர் விருது பெற்றதற்கு பாராட்டுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு தொகுதிக்குட்பட்ட 35வது வார்டு, வாலிபாளையம் அருள்மிகு ஸ்ரீ மாகாளியம்மன் திருக்கோவிலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் கோவிலின் முன்பு அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட நிழற்கூரையை மத்திய மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் திறந்து வைத்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவினை வழங்கினார். வைத்தார். தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராஜன், மாமன்ற உறுப்பினர், மாநகர பொருளாளர் ஜி.செந்தூர் முத்து, வடக்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் செ.திலகராஜ் உள்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில்

# ரூ.2.66 கோடி மதிப்பீட்டில் 54 நீர் நிலைகளில் தூர் வாரும் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், மே, 13–

அரியலூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித்துறையின்சார்பில்ரூ.2.66 கோடி மதிப்பீட்டில் 54 நீர்நிலைகளில் தூர் வாரும் பணிகள் நடைபெறவுள்ளதை முன்னிட்டு இப்பணிகளை தொடங்கி வைக்கும் விதமாகதமிழ்நாடுஅரசுபோக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை சா.சி. சிவசங்கர் அரியலூர் ஊராட்சி ஒன்றியம், ஓட்டக்கோவில் ஊராட்சி வைத்தியலிங்க உடையார் ஏரியில் ரூ.4.18 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரும் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள வரத்து வாய்க்கால்கள், பாசன வாய்க்கால்கள், உபரி நீர் வாய்க்கால்கள், ஓடை மற்றும் வடிகால்கள் முட்புதர்கள் மண்டியும் மண்மேடிட்டு தூர்ந்தும் உள்ளதால் நீர் வெளியேற்றும் திறன் குறைந்து தற்போது பெய்த வடகிழக்கு பருவமழையால் ஏற்பட்ட வெள்ள நீர் முழுமையாக வடிய இயலாமல் பாசன நிலங்களில் நீர்தேங்கி விவசாய சாகுபடி பயிர்களுக்கும் மற்றும் நிலங்களுக்கும் சேதம் ஏற்படுத்தி உள்ளது. இதனை கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி அரியலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.266.07 இலட்சம் மதிப்பீட்டில் 54 நீர்நிலைகளில் தூர் வாரும் பணிகள் நடைபெறவுள்ளது. இப்பணிகளை தொடங்கி வைப்பதன் ஒரு பகுதியாக அரியலூர் ஊராட்சி ஒன்றியம், ஓட்டக்கோவில் ஊராட்சிக்குட்பட்ட வைத்தியலிங்க உடையார் ஏரியில் ரூ.4.18 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரும் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துமற்றும்மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கிவைத்தார்.மேலும்,தூர்வாரும் பணிகளை உரிய காலத்திற்குள் முடித்திடவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில்அரியலூர்வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், அரியலூர்வட்டாட்சியர்முத்துலெட்சுமி, ஒன்றிய பொறுப்பாளர் கோ. அறிவழகன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு,மாவட்டபொறியாளர்அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், கழக நிர்வாகிகள் ஆனந்த், கௌதம், சக்திவேல் மற்றும் இதர அரசு அலுவலர்கள்,பொதுமக்கள்உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட மருத்துவர் அணி, சிங்காநல்லூர் பகுதி 1 மற்றும் கே.எம்.சி.எச். மருத்துவக்கல்லூரி சார்பில் ஒண்டிப்புதூர், செங்கோடம்மன் மண்டபத்தில் பகுதி செயலாளர் எஸ்.எம்.சாமி, மாநகர் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்.பிரதீப்குமார் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் இலவச பொது மருத்துவ முகாமை மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக் துவக்கி வைத்தார். இதில் கணபதி ராஜ்குமார் எம்.பி. டாக்டர்.கோகுல் கிருபா சங்கர், ஆடிட்டர் சசிகுமார், நாகவள்ளி, சாந்தாமணி பன்னீர்செல்வம், என்.டி.சின்னச்சாமி, கஸ்தூரி அருண், தா.சுரேஷ்குமார், LPF சண்முகம், தி.இளங்கோவன், ராஜேந்திரன், சிங்கை அன்பு, நவீன் முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


